# புஜை சிறுகதையில் புரட்சிப் பெண் பூரணி

# Poorani is the Revolutionary Woman in the Short Story Pujai

***ச. சிவரக்ஷவி***
முனைவர் பட்ட ஆய்வாளர் (முழு நேரம்)
தமிழ்த்துறை (அரசு உதவிப் பெறும் பிரிவு)
கொங்குநாடு கலைஅறிவியல் கல்லூரி
(தன்னாட்சி), கோயம்புத்தூர்

**S. Sivarakshavi**
*PhD scholar Tamil (Full Time)*
*Department of Tamil (Aided)*
*Kongunad Arts and Science College (Autonomous)*
*Coimbatore*

## ஆய்வுச் சுருக்கம்

*கவிஞரும் எழுத்தாளருமான ஆண்டாள் பிரியதர்ஷினி அவர்களின் பூஜை என்னும் சிறுகதையில் பெண்களுக்கு ஏற்படும் சமுதாயச் சிக்கல்கள், ஒதுக்கப்படும் பெண்கள் மற்றும் புரட்சி பெண்ணான பூரணி பற்றி விவரித்து எடுத்துக் கூறுவதே இவ்வாய்வின் நோக்கமாகும்.*

***முக்கியச்சொற்கள்:*** *புரட்சிப் பெண், சமத்துவமின்மை, முற்போக்குச் சிந்தனை, ஒதுக்கப்படுதல்*

## Abstract

*The purpose of this study is to describe the social problems faced by women, the excluded women and the revolutionary woman Purani in the short story Pooja by poet and writer Andal Priyadarshini.*

***Keywords:*** *Revolutionary Woman, Inequality, Progressive Thinking, Being Assigned.*

**Citation**

Sivarakshavi, S. “Poorani is the Revolutionary Woman in the Short Story Pujai.” *Journal of Tamil Culture and Literature*, vol. 3, no. 1, 2023, pp. 102–107.
DOI: *https://doi.org/10.5281/zenodo.20135520*

**முன்னுரை**

*திருமதி ஆண்டாள் பிரியதர்ஷினி அவர்கள் பூஜை என்னும் சிறுகதையின் மூலம் ஒரு விதவைப் பெண்ணானவள் எவ்வாறு இச்சமுதாயத்தில் பார்க்கப்படுகிறாள் என்பதனையும் அவள் அதுபோன்ற பார்வைகளில் இருந்து எவ்வாறு வெளியேற வேண்டும் என்பதையும் எழுத்தாளர் மிக அருமையாக எடுத்துரைத்துள்ளார். அவரின் பூஜை என்னும் சிறுகதையின் மையக்கரு மற்றும் புரட்சிப் பெண் பூரணி இச்சமுதாயத்தின் பழிச் சொல்லிலிருந்து எவ்வாறு விடுபடுகிறாள் என்பதனைப் பற்றி இக்கட்டுரையில் அறியலாம்.*

**ஆசிரியர் முன்னோட்டம்**

*அக்டோபர் 5, 1962 பாளையங்கோட்டை, தமிழ்நாட்டில் பிறந்த ஆண்டாள் பிரியதர்ஷினி அவர்கள் சிறந்த கவிஞர் மற்றும் எழுத்தாளராவார். கவிஞர் ஆ. கணபதி மற்றும் சுப்புலட்சுமிக்கு பிறந்த இவர் கவிஞர் பாலரமணி என்னும் நபரைக் கரம் பிடித்தார். ஆங்கிலத்தில் ஆய்வியல் நிறைஞர் பட்டம் பெற்ற இவர் தமிழின் மீது கொண்ட பற்றால் ஒரு சிறந்த தமிழ் எழுத்தாளராகத் திகழ்ந்தார். புதிய திருப்பாவை, சுயம் பேசும் கிளி, முத்தங்கள் தீர்ந்து விட்டன, காதல் நாற்பது, நான் வல்லினம் போன்ற கவிதை தொகுப்புகளையும் சுருதி பிசகாத வீணை, முதல் ஒளிபரப்பு ஆரம்பம், தாளம் தப்பிய தாலாட்டு, தலைமுறை தாகம், சாருலதா, தோஷம் போன்ற பல்வேறு சிறுகதைத் தொகுப்புகள் மற்றும் புதினத்தினை இவர் இயற்றியுள்ளார்.*

*நவீன தமிழ் பெண் எழுத்தாளர்களில் ஆண்டாள் பிரியதர்ஷினி குறிப்பிடத்தக்கவர். கவிஞர், எழுத்தாளர், கட்டுரையாளர், தொலைக்காட்சி நிகழ்ச்சித் தயாரிப்பாளர், சமீப காலத் திரைப்படப் பாடல் ஆசிரியர் என்று பல பரிமாணங்கள் இவருக்கு உண்டு. பெண்ணிய கருத்துகளை ஆணித்தரமாக எடுத்துரைப்பதை தன் பாணியாகக் கொண்டவர். பெரும்பான்மையான கதைகளில் கதாநாயகியாக சரஸ்வதியைப் படைத்து சரஸ்வதியின் மூலம் பெண் விடுதலையைச் சாத்தியமாக்க முனைந்துள்ளார். அன்றைய ஆண்டாளின் எழுத்து தமிழ் மக்களுக்குப் புதிய தரிசனம் தந்தது போல இன்றைய ஆண்டாளின் எழுத்து தமிழ் மக்களுக்குப் புதிய தரிசனமாக அமைந்துள்ளது.*

**சிறுகதை**

*எட்கர் ஆலன் போ என்பவர் ''கால் மணியிலிருந்து ஒரு மணி அல்லது இரண்டு மணி நேரத்திற்குள்ளாகப் படித்து முடிக்கிறார் போல் சிறுகதை இருக்க வேண்டும் என்றும் கதை முழுவதும் முன்பே திட்டமிட்ட விளைவனுக்குப் பொருந்தாத ஒரு சொல் கூட நேர்முகமாகவும் மறைமுகமாகவும் பயன்படுத்தக் கூடாது'' என்றும் கூறுகிறார்.*

*''நெடுங்கதை ஆகிய நாவலின் சுருக்கம் அன்று சிறுகதை. சிறுகதை என்னும் பெயர் கதையின் அளவையொட்டி அமைந்ததாகும்'' (கா.பிரபாகரி, இலக்கியத் திறனாய்வும் கொள்கைகளும், ப. எண்-202). சிறுகதை என்பது அளவில் சிறியதாக இருக்க வேண்டும். படிப்பவர் எளிதில் படித்து முடித்தார் போலவும் எளிதில் புரியக்கூடியதாகவும் அமைதல் வேண்டும். படிப்பவரைத் தன்கண் இரண்டறக் கலக்கும் படியாகச் செய்யும் ஆற்றல் உடையதாய் சிறுகதை இருத்தல் அவசியமாகும்.*

*கதை சொல்லும் மரபு தொன்றுதொட்டு இருந்து வந்த வழக்கம் என்பதை கீழ்காணும் தொல்காப்பியரின் நூற்பாக்களின் மூலம் அறியமுடிகிறது,*

**"*பொருள் மரபு இல்லாப் பொய்ம்மொழி யானும்*
*பொருளோடு புணர்ந்த நகைமொழியானும்*"**

***(தொல்-பொருளதிகாரம், நூற்பா எண் -475).***

**கதைச்சுருக்கம்**

*ஆண்டாள் பிரியதர்ஷினி அவர்களின் பூஜை என்னும் சிறுகதை இன்றைய நிலையில் பெண்கள் ஒதுக்கப்படுபவர்களாகவும் உரிமையற்றவர்களாகவும்தான் அதிகமாகப் பார்க்கப் படுகிறார்கள் என்பதை கூறுகின்றது. பூஜை என்னும் சிறுகதையில் கோவிலுக்குச் சென்ற பூரணி என்ற விதவைப் பெண்ணைப் பார்த்து அவள் களங்கமுற்றவள் அவள் தீண்டத்தகாதவள் என்று பார்க்கும் சமுதாயத்தினர் பேசும், "என்ன அவசரம் சுமங்கலி பூஜை நடக்கிறப்போ? இன்னைக்கு நீ வரணுமா? சுவாமிகள் கோயிலுக்கு எழுந்தருளி இருக்கிறப்போ, இது என்ன அபசகுணம். சுமங்கலி பெண்களோட ஒட்டாத தள்ளி நில்லு. குங்குமம் பூவு கொடுக்க லஜ்ஜையா இருக்கும். மத்தவங்களுக்கும் அபச்சாரமாக இருக்கும். நீ கௌம்பு இடத்தை காலி பண்ணு பூரணி. கூட்டம் இல்லாத பொழுதா, இன்னொரு நாள் வா... போ... போ..." (ஆண்டாள் பிரியதர்ஷினியின் சிறுகதைகள், பக்க எண். 206) என்று விரட்டும் சமுதாயத்தோடு போரிட்டு சுமங்கலி பூஜையைத் தானும் செய்ய வேண்டும் என்று அவள் புரட்சிப் பெண்ணாக எழுந்து ஒதுக்கப்படும் பெண்களுக்கு ஓர் எடுத்துக்காட்டாக எவ்வாறு அமைக்கிறாள் என்பதே இச்சிறுகதையின் மையக்கருவாகும்.*

**பெண்களுக்கு ஏற்படும் சமுதாயச் சிக்கல்கள்**

*வளர்ந்து வரும் இந்திய நாட்டில் பெண்கள் எல்லா துறைகளிலும் ஆண்களுக்கு ஈடாக சாதித்து வருகின்றனர். அன்று விடுதலைப் போராட்டத்தில் வேலுநாச்சியார், ராணி சென்னம்மா, ராணி லட்சுமி பாய், ஜால்காரிபாய், ராணி அவந்திபாய், கஸ்தூரிபாய் காந்தி என்று தொடங்கி இன்று காவல்துறை, விண்வெளித்துறை, விளையாட்டுத் துறை, கல்வித்துறை, மருத்துவத் துறை, திரைப்படத்துறை, கட்டுமானத்துறை, இராணுவத்துறை,அரசியல்துறை போன்ற எல்லா துறைகளிலும் பெண்கள் பங்கு மிகவும் அதிகமாகக் காணப்படுகிறது.*

**"*அச்சமும் மடமையும் இல்லாத பெண்கள்*
*அழகிய தமிழ் நாட்டின் கண்கள்*
*மடமை தான் அச்சத்தின் வேராம் - அந்த*
*மடைமையால் விளைவதே போராம்*
*கடமையும் அறநல் லொழுக்கமும் வேண்டும்*
*கல்வி வேண்டும் அறிவு கேள்வியும் வேண்டும்!!!*"**

*என்ற பாரதிதாசன் கவிதை வரிகள் பெண்ணானவள் அச்சமும் மடமையும் இன்றி கடமையுடனும் நல்லொழுக்கத்துடனும் கல்வி அறிவு, கேள்வி கேட்கும் உறுதியுடனும் இருக்க வேண்டும் என்பதை கூறுகின்றார்.*

*பெண்களுக்குச் சிக்கல்கள் என்பது எல்லாவிதத்திலும் நாலாப்புறங்களில் இருந்தும் வருகின்றன. முக்கியமாகத் திருமணமான பெண்கள் தன் கணவனை இழந்தால் அவள் ஒர் அபசகுனமான பெண்ணாகப் பார்க்கப்படுகிறாள். இதுவே அவளுக்குத் திருமணம் ஆகி சிறிது நாட்களிலேயே குழந்தை பாக்கியம் கிடைக்கவில்லை எனில் அவள் பெண்மையற்றவள் மலடி என்று ஒதுக்கப்படுகிறாள். இதுபோன்ற பெண்கள் எல்லா விசேஷங்களிலும் திருவிழாக்களிலும் ஒதுக்கப்படுகிறார்கள்.*

***"மாதர்க் குண்டு சுதந்திரம் என்று நின்***
***வான்மலர் திருவாயின் மொழிந்த சொல்***
***நாதர் தானாது நாரதன் வீணையோ!"***

***(நவபாரதி, பாரதியார் கவிதைகள் ப.எண். 347)***

*மங்கைகளுக்கும் சுதந்திரம் உண்டு என்று புலவர்கள் பாடும் பாடல்கள் நாரதர் வீணையில் இருந்து வரும் நாதத்தை விட இனிமையானதாகும் என்று பாரதியின் வரிகள் பெண்ணின் சுதந்திரத்திற்கான முக்கியத்துவத்தை மெருகூட்டுகிறது. பெண்களுக்கான சுதந்திரம் என்பது இரண்டாம் பட்சத்தில் இருந்தாலும் இங்கு சமத்துவம் என்பது காணக் கிடைக்காத ஒன்றாக உள்ளது.*

*மனைவியை இழந்த கணவன் எத்தனை திருமணம் வேண்டுமானாலும் செய்து கொள்ளலாம் ஆனால் கணவனை இழந்த பெண் விதவை கோலத்தில் வெள்ளைப் புடவை அணிந்து கொண்டு பூவில்லாமல் பொட்டு இல்லாமல் ஒரு மூளையில் ஒடுங்கி இருக்க வேண்டும். தனது மனைவிக்குக் குழந்தை பாக்கியம் இல்லை என்றால் வேறொரு திருமணம் செய்து கொண்டு எத்தனை குழந்தைகள் வேண்டுமானாலும் பெற்றுக் கொள்ளலாம். ஆனால் பெண்களோ இச்சமுதாயத்தின் முன் மலடி என்ற பெயருடன் அவமானப்பட்டு பரிதாப பொருளாகப் பார்க்கப்படுகின்றனர்.*

*ஆண்டாள் பிரியதர்ஷினியின் பூஜை என்னும் சிறுகதையில் பூரணி என்ற விதவைப் பெண் கோவிலில் ஒர் அபசகுனமானவளாகவும் கலங்கமுற்றவளாகவும் பார்க்கப்படுகின்றாள். கோவிலுக்குள் வந்த பூரணியை "உன்னை யாரு உள்ளே அனுப்பினது? பூஜை ஆரம்பிக்கப் போறது. நந்தி மாதிரி குறுக்க வர்றியே. நாரசாரம். நகரு...நகரு" (ஆண்டாள் பிரியதர்ஷினி சிறுகதைகள், ப.எண்-208) என்றெல்லாம் விரட்டி அடிக்கின்றனர். அக்கோவிலுக்குள்ளே மனைவியை இழந்த ஆண்கள் கருவறை வரையில் கூடச் சென்று வரலாம். ஆனால் கணவனை இழந்த ஒரு பெண் கோவிலுக்குள் அடியெடுத்து வைப்பதே அபச்சாரமாகப் பார்க்கப்படும் சமுதாயமாக இச்சமுதாயம் இன்னும் திகழ்கிறது.*

**புரட்சிப் பெண்கள்**

*அன்று முதல் இன்று வரை பெண்களும் பெரியார் போன்ற ஆண்களும் பெண் விடுதலைக்காகவும் சம உரிமைக்காகவும் போராடிக் கொண்டு வருகின்றனர். இப்போராட்டத்தில் பெண்களின் பங்கு சிறிது அதிகம். எடுத்துக்காட்டாக, ஆண்டாள் பிரியதர்ஷினி அவர்கள் தனது எழுத்துக்களின் மூலம் பெண் விடுதலைக்காகப் போராடுகின்றார். அதுபோல ஒவ்வொரு துறையில் இருக்கும் பெண்களும் அதற்கேற்ப பெண் விடுதலைக்காகவும் சம உரிமைக்காகவும் குரல் கொடுத்துக் கொண்டு தான் இருக்கின்றனர்.*

*பெரும்பாலான பெண்கள் அனைத்து துறைகளிலும் சாதனை செய்து வந்தாலும் பல்வேறு இடங்களில் அடிமைத்தனமும் ஆணவமும் சம உரிமை இன்மையையும் எதிர்கொண்டு வருகின்றனர். பெண்களை காமப் பொருளாக மட்டும் பார்க்கும் ஆணினம் எவ்வாறு சம உரிமையும் மரியாதையையும் கொடுக்கும்?*

*பூஜை என்னும் சிறுகதையில் தன்னை கோவிலில் இருந்து வெளியேற்ற துடிக்கும் ஆண் மக்களை எதிர்த்து "தொடாதீங்க, தொலைச்சிடுவேன் அம்மன் முன்னாடி நாரசாரமாயிடும். நானும் சுமங்கலி பூஜை பண்ணனும்" (ஆண்டாள் பிரியதர்ஷினியின் சிறுகதைகள் ப. எண்-209) என்று எதிர்த்துப் பேசினாலும் அவளின் வேண்டுகோளுக்கு விளக்கமாக "குருபீடம் அருளினதைத் தான் நான் சொல்றேன். உறவும் பந்தமும் ஒவ்வொரு ஜென்மமும் தொடரும்னு சொன்னிங்களே? பித்ருக்கள் மறுபடியும் ஜனிக்கின்றார்கள் என்று சொல்லுதே தத்துவம் அப்ப ஆன்மா நிரந்தரம்னு தானே அர்த்தம் ஆன்மா நித்தியங்கிற நம்பிக்கை தானே பித்ரு காரியத்தோட தாத்பர்யம்? பிரார்த்தனை, ஆன்மாவைப் போய் சேரும் என்கிற நம்பிக்கை நிஜம் தானே? அப்போ என் புருஷனோட ஆன்மாவும் உயிரோட தான் இருக்கு அழியாத ஆன்மாவுக்காக நான் ஏன் அநாவிசியமா பாரம் சுமக்கணும்? தீட்டுக்காரி விதவைக்காரி என்கிற சிலுவை ஏன் சுமக்கணும்? எங்களோட ஆத்மார்த்தமான பந்தம் இப்பவும் தொடருது. அவர் ஆன்மா மறையல. ஆத்மா நிரந்தரம் என்று நம்பி பித்ருகாரியம் பண்றோம். அதே நம்பிக்கையில் நான் சுமங்கலி பூஜையும் பண்ணலாம் தானே?"(ஆண்டாள் பிரியதர்ஷினியின் சிறுகதைகள் ப. எண்-210) என்ற பூரணியின் விளக்கம் அனைவரின் வாயையும் கட்டியது.*

*புரட்சிப் பெண்ணாகத் தன் இழந்த கணவனுக்காக அவரின் பந்தம் தொடர நான் சுமங்கலிப் பூஜை செய்வேன் என்று பூரணி அப்பூஜையினை செய்கின்றாள். அவளின் உருக்கமான பதில் உறுதியான செயல் ஒதுக்கப்படும் மற்றும் தாழ்த்தப்படும் பெண்களுக்கு ஓர் எடுத்துக்காட்டாக அமைந்தது.*

*எந்த ஓர் இறைவனும் குழந்தை பெறவில்லை என்றாலோ கணவன் தன்னை இழந்தவள் என்றாலோ அவள் மதிக்கத்தகாதவள் என்று கூறவில்லை. பெண் என்பவள் ஓர் உயிரைக் கொடுக்கும் உத்தமமானவள் அவளுக்கான சம உரிமைகள் கொடுக்கப்பட வேண்டும். வலைப்பூட்டலில் குழந்தை இல்லாத பெண்கள் ஒரு குழந்தையைச் சுமக்கும் பெண்ணுக்கு ஆசீர்வாதம் செய்யக்கூடாது என்ற முற்போக்கு சிந்தனை மாற வேண்டும். எந்த ஒரு நற்காரியம் ஆயினும் கணவனை இழந்த பெண்ணாகவோ குழந்தை இல்லாத பெண்ணாகவோ இருந்தால் அவள் ஒதுக்கப்பட்டு மரியாதை இன்றி நடத்தப்படும் இச்சமுதாயம் சிறிது மாற்றம் காண வேண்டும்.*

***"எத்திணை மருங்கினும் மகடூஉ மடல்மேல்***
***பொற்புடை நெறிமை இன்மை யான்"***

***(இளம்பூரணர் உரை, தொல்காப்பியம் பொருளதிகாரம், ப.எண் 35)***

*சங்க கால பெண்களுக்கு அச்சம், மடம், நாணம் என்பது இயற்கையாகவே அமைந்த பண்புகள் ஆதலால் அவர்கள் மடல் ஏறுவதில்லை என்று தொல்காப்பியர் தனது நூலில் குறிப்பிட்டுள்ளார். ஆனால் இன்றைய பெண்களுக்கு வீரமும் உறுதியும் இயல்பானப்*

*பண்புகளாக இருக்க வேண்டும். அப்படியானால் மட்டுமே பெண்கள் இச்சமுதாயத்தில் சம உரிமையோடு நடமாட இயலும்.*

**முடிவுரை**

*மேற்கண்டவாறு பூஜை என்னும் சிறுகதையின் மூலம் ஒரு பெண்ணுக்கு சம உரிமை மறுக்கப்படுவதும் அதிலிருந்து அவள் எவ்வாறு மீண்டு வருகிறாள் என்பதனைப் பற்றியும் அறிய முடிகின்றது. பெண்களை இழிவுபடுத்தும் மானிடர் முன் ஒவ்வொரு பெண்ணும்,*

**“*நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வையும்,*
*நிலத்தில் யாருக்கும் அஞ்சாத நெறிகளும்*
*திமிர்ந்த ஞானச் செருக்கும் இருப்பதால்*
*செம்மை மாதர் திறம்புவ தில்லையாம்!*”**

***(நவபாரதி, பாரதியார் கவிதைகள்,ப.எண்.349)***

*என்ற மகாகவி பாரதியின் வரிகளைக் கருத்தில் கொண்டு வீரமங்கையாகச் செயல்பட வேண்டும். ஊரின் பழிச் சொல்லுக்கு அஞ்சி ஒடுங்கி விடாமல் பாரதி கண்ட புதுமை பெண்ணாக இப்பாரத நாட்டில் திகழ்ந்திட வேண்டும். தானும் ஆண்களைவிட எவ்விதத்திலும் சலைத்தவர்கள் அல்ல என்ற மன உறுதி முதலில் பெண்ணுக்கு வேண்டும்.*

**துணை நூல்கள்**

1. *எஸ்.ராமகிருஷ்ணன் தமிழ்க் கவிதைகள் மற்றும் சிறுகதைகளின் தொகுப்பு* ValaiTamil.com, *தமிழ் இலக்கியக் கட்டுரைகளின் பெரிய மற்றும் அரிய தொகுப்பு.*

## References

1. S. Ramakrishnan, A collection of Tamil Poems and Short Stories, ValaiTamil.com, A Large and Rare collection of Tamil Literature Articles.